
1


## சிறப்பு வரைபடம் 1.8:
## அரசிறை, செலவினம் மற்றும் முக்கிய இறை நிலுவைகள்

அரசிறை





*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

அரச செலவினம்





*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மத்திய அரசின் வெளிநின்ற படுகடன்




*மூலங்கள்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

* ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024இன் அட்டவணை 1.21இன் அடிக்குறிப்புக்களைப் பார்க்கவும்.

பல தசாப்தங்களாக நீடித்த இறைத் துறை சமமின்மைகள் நாள்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகள் உள்ளடங்கலாக, 2022இல் உயர்வினை அடைந்தது. தொடர்ச்சியான இறைச் சரிவுகள், கொள்கைத் தவறுகள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றால் நெருக்கடி உந்தப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் வகையில், அரசிறை அடிப்படையிலான இறைச் சீராக்கம் மீதான கவனம்செலுத்தலுடன், அரசாங்கம் 2022 நடுப்பகுதியிலிருந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஒருங்கிணைப்பு முயற்சிகளை நடைமுறைப்படுத்தியது. இம்முயற்சிகள் வலுவான அரசிறை வளர்ச்சி, கட்டுப்படுத்தப்பட்ட செலவினங்கள் மற்றும் முக்கிய இறை நிலுவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க முழுமையான திருப்பத்திற்கு வழிவகுத்துள்ளன.

2024ஆம் ஆண்டளவில், இறைத் துறை தொடர்ச்சியாக இரு ஆண்டுகளுக்குச் சாதகமான முதலாந்தர நிலுவையொன்றினை அடைந்தது.

எதிர்பார்க்கப்படும் இறைத் திரட்சி மற்றும் படுகடன் குறைப்பு முயற்சிகளிலிருந்தான ஏதேனும் எதிர்பாராத விலகல்கள் கடின உழைப்பினால் பெறப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும் என்பதால், கொள்கை மீள்திரும்பல்களின்றி இவ் உத்வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது.